

ஈரோட்டில் தந்தை பெரியார் வாசகர் வட்டம் சார்பில் கனிமொழி ஏற்பாட்டில் “ஏன் வேண்டும் இன்பத் திராவிடம் 2.0” கருத்தரங்கில் கழக துணைப் பொதுச் செயலாளரும் , நாடாளுமன்ற உறுப்பினருமான ஆ.ராசா கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். நிகழ்வில் ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், கழக நெசவாளரணி செயலாளர் எஸ்.எல்.டி.ப.சச்சிதானந்தம், மாவட்ட நிர்வாகிகள் ஆ.செந்தில்குமார், க.சின்னையன், செல்லபொன்னி, மாநகர கழக செயலாளர் மு.சுப்ரமணியன், தெற்கு மாவட்ட கழக இளைஞரணி அமைப்பாளர் ஜெ. திருவாசகம், பகுதி கழக செயலாளர்கள் எஸ்.குமாரவடிவேல், வி.சி.நடராஜன், பொ.ராமச்சந்திரன், வி.செல்வராஜ், அக்னி டி.சந்திரசேகரன், வில்லரசம்பட்டி ஏ.முருகேசன், குறிஞ்சி என்.தண்டபாணி, க.லட்சுமண குமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### பெரம்பலூர் மாவட்டம், பெரியவெண்மணியில், ரூ.56 கோடி மதிப்பில்

# அரசு மாதிரி மேல்நிலைப்பள்ளிக் கட்டடம் - விடுதிக் கட்டடங்கள்!

### அமைச்சர்கள் எ.வ.வேலு - சா.சி.சிவசங்கர் அடிக்கல் நாட்டினர்!

பெரம்பலூர், ஜன.31-

பெரம்பலூர் மாவட்டம், பெரியவெண்மணியில், பொதுப்பணித்துறை மற்றும் நெடுஞ்சாலைகள் துறை அமைச்சர் எ.வ.வேலு மற்றும் போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கலந்து கொண்டு,ரூ.56 கோடி மதிப்பில் அரசு மாதிரி மேல்நிலைப்பள்ளி கட்டடம் மற்றும் மாணவர், மாணவியர் விடுதி கட்டடங்கள் கட்டுவதற்கு 28.01.2025 அன்று தமிழ்நாடு அரசு மாதிரிப்பள்ளிகள் குழுமத்திற்கான உறுப்பினர் செயலர் ரா.சுதன், தலைமையில் அடிக்கல் நாட்டினார்கள்.

இந்நிகழ்ச்சியில் பொதுப்பணித்துறை மற்றும நெடுஞ்சாலைகள் துறை அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது, முதலமைச்சர் அவர்கள் மாணவர்களின் கல்வித் தரத்தை அடுத்த நிலைக்குக் கொண்டு போக வேண்டும் என்ற அடிப்படையில்தான் இப்படி மாதிரிப்பள்ளிகளை கட்ட உத்தரவிட்டார்.

அனைத்து மாவட்டங்களிலும் மாதிரிப் பள்ளிகள் உள்ளது.ஏற்கனவே தமிழ்நாட்டில் திருவண்ணாமலை, திருச்சி, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, கடலூர் ஆகிய 5 மாவட்டங்களில் மாதிரிப் பள்ளிகளுக்கான புதிய கட்டடங்கள் கட்டப்பட்டு செயல்பாட்டு வருகின்றது. இன்று பெரம்பலூர் மாவட்டத்தில் மாதிரி பள்ளி மற்றும் மாணவ மாணவியர் விடுதிகளுக்கு அடிக்கல் நாட்டி உள்ளோம்.

இதில் படித்த மாணவர்கள் IIT போன்ற தொழில்நுட்பம் மிகுந்த இடங்களிலே படிக்க இடம் கிடைத்திருக்கிறது. அதே போன்று மருத்துவத்திலே இடம் கிடைத்திருக்கிறது.

எனவே அந்த அளவுக்கு பள்ளிகளை மேன்மேலும் அடுத்த கட்டத் தரத்திற்கு கொண்டு போவதற்காகத் தான் இது போன்ற மாதிரிப் பள்ளிகள் கட்டியிருக்கிறோம்.

பெரம்பலூர் மாவட்டத்தில் அரசு மாதிரிப் பள்ளி 2022-2023 கல்வியாண்டில் தொடங்கப்பட்டு கடந்த மூன்று ஆண்டுகளாக பெரம்பலூர் மாவட்டம் உடும்பியம் ஈடன் கார்டன் பள்ளி வளாகத்தில் செயல்பட்டு வருகிறது. கடந்த 2024 ஆம் ஆண்டு நவம்பர் 15 ஆம் நாள் பெரம்பலூர் மாவட்டத்திற்கான மாதிரிப் பள்ளியில் சுமார் 800 மாணவர்கள் தங்கி பயில்வதற்கான பள்ளி வகுப்பறைகள் மற்றும் ஆண் பெண் இருபாலருக்கான தனித்தனி விடுதி வசதிகள் ரூபாய் 56 கோடி மதிப்பில் கட்டப்படும் என தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள்.

அதனடிப்படையில் 28.01.2026 அன்று அடிக்கல் நாட்டப்பட்டது. இந்த அரசு மாதிரிப்பள்ளியானது தரை தளம் மற்றும் இரண்டு தளங்களுடன், 22 வகுப்பறைகள், 3 ஆய்வுக்கூடங்கள், நூலகம், கூட்டரங்கம், கணினி ஆய்வகம் உள்ளிட்ட வசதிகளுடன் கட்டப்படவுள்ளது,

400 மாணவர்கள், 400 மாணவிகள் தங்கிப்பயிலும் வகையில் விடுதி கட்டடங்கள் கட்டப்படவுள்ளது. இதில் தங்கும் அறை, சமையலறை, உணவுக்கூடம், சலவைஅறை, பன்னோக்கு அறை என மின்தூக்கி வசதியுடன் இந்த கட்டடங்கள் அமைக்கப்படவுள்ளது. 7 ஏக்கர் பரப்பளவில் அமையவுள்ள இந்த மாதிரிப்பள்ளி மற்றும் விடுதிகள் அமையவுள்ளது.

தற்போது பெரம்பலூர் மாவட்ட அரசு மாதிரிப் பள்ளியில் 138 மாணவர்கள், 145 மாணவியர்கள் என மொத்தம் 283 மாணவர்கள் பயின்று வருகின்றனர்.

இவ்வாறு தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் ந.மிருணாளினி, பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் ம.பிரபாகரன், மாவட்ட கழக பொறுப்பாளர் வீ. ஜெகதீசன், மாவட்ட வருவாய் அலுவலர் க.கண்ணன், பொதுப்பணித் துறை திருச்சி மண்டல தலைமைப்பொறியாளர் செந்தில், கண்காணிப்பு பொறியாளர் செந்தில்குமார், செயற்பொறியாளர் வேலுச்சாமி, மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் சுவாமி முத்தழகன், வேப்பூர் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் சி.ராஜேந்திரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### நாமக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க, திருச்செங்கோடு கிழக்கு மேற்கு நகர தி.மு.க, சார்பில்

# ‘திராவிட மாடல்’ அரசின் 5 ஆண்டு சாதனை விளக்கப் பொதுக்கூட்டம்!

### கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ., அமைச்சர் மா.மதிவேந்தன், கே.எஸ்.மூர்த்தி பங்கேற்பு!

நாமக்கல், ஜன. 31 -

திராவிட மாடல் அரசின் 5 ஆண்டு சாதனை விளக்கப் பொதுக்கூட்டம்

நாமக்கல் மேற்கு மாவட்டம் குமாரபாளையத்தில் மாபெரும் அளவில் நடைபெறுகிறது.

நாமக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க. மற்றும் திருச்செங்கோடு கிழக்கு, மேற்கு நகர திமுக சார்பில், திராவிட மாடல் அரசின் 5 ஆண்டுகால சாதனைகளை பொதுமக்களிடம் எடுத்துரைக்கும் வகையில் மாபெரும் சாதனை விளக்கப் பொதுக்கூட்டம் இன்று (31.01.2026-சனிக்கிழமை) மாலை 6.00 மணிக்கு, திருச்செங்கோடு நெல்லுகுத்தி மண்டபம் அருகில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு திருச்செங்கோடு மேற்கு நகர கழகப் பொறுப்பாளர் ஆர். நடேசன் தலைமை தாங்குகிறார்.

கிழக்கு நகர கழகப் பொறுப்பாளர் தா.கார்த்திகேயன் வரவேற்புரையாற்றுகிறார்.

இக்கூட்டத்தில் கழக அமைப்புச் செயலாளர் ஆர். எஸ்.பாரதி, முன்னாள் அமைச்சரும், மேற்கு மண்டல பொறுப்பாளருமான வி.செந்தில்பாலாஜி, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், நாமக்கல் மேற்கு மாவட்ட கழகப் பொறுப்பாளரும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான கே.எஸ். மூர்த்தி, ஆகியோர் சிறப்புரையாற்ற உள்ளனர்

இந்நிகழ்ச்சியில் மாநில, மாவட்ட,நிர்வாகிகள் ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர்கள், கழக நிர்வாகிகள் கழகத் தொண்டர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொள்ள உள்ளனர் . இறுதியாக னாள் நகர துணை செயலாளர் மு.ராஜவேல் நன்றி கூறுகிறார்.




தருமபுரி மாவட்டம், பாளையம்புதூர் அரசு மேல்நிலைப்பள்ளியில் தருமபுரி மாவட்ட ஆட்சித்தலைவர் ரெ.சதீஸ்,தருமபுரி தி.மு.க. கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் வழக்கறிஞர்.ஆ.மணி எம்.பி.ஆகியோர் கலந்து கொண்டு HPV தடுப்பூசி செலுத்தும் பணியினை துவக்கி வைத்து,தடுப்பூசி செலுத்திக்கொண்ட பள்ளி மாணவியர்களுக்கு சான்றிதழ்களை வழங்கினர்.உடன் அரசு தருமபுரி மருத்துவக் கல்லூரி முதல்வர் மரு.டி.எம். மனோகர்,இணை இயக்குநர் மரு.எம்.சாந்தி,மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் ஜோதி சந்திரா,குழந்தைகள் நல மருத்துவர் மரு.காந்தி,மற்றும் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்



அரியலூர் மாவட்டம் செயங்கொண்டத்தில் கழகப் பேச்சாளர் வெற்றிகொண்டான் அவர்களின் 15 ஆம் ஆண்டு நினைவுநாளை முன்னிட்டு தலைமைக் கழக வழக்கறிஞர் சூர்யா வெற்றிகொண்டான், ஜெயங்கொண்டம் நகர செயலாளர் வெ.கொ.கருணாநிதி ஆகியோரது இல்லத்தில் வெற்றிகொண்டான் அவர்களது திருவுருவப் படத்திற்கு அமைச்சர் சா.சி.சிவசங்கர் மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தினார். உடன் நகர கழக செயலாளர் வெ.கொ.கருணாநிதி,செயங்கொண்டம், ஒன்றிய பொறுப்பாளர் தனசேகர், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயிகதிரவன், மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

### ஆட்சிக்கு வந்த

# 1728 நாட்களில் 4000 திருக்கோயில் குடமுழுக்குகள்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சென்னை, ஜன. 31 -

திராவிட மாடல் அரசு ஆட்சிக்கு வந்த 1728 நாட்களில் 4000 திருக்கோயில்களில் குடமுழுக்குகள் நடத்தப்பட்டுள்ளது குறித்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளி யிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:

ஆட்சிக்கு வந்த 1728 நாட்களில் 4000 திருக்கோயில் குடமுழுக்குகள்!

ஆயிரமாவது குடமுழுக்கு மேற்கு மாம்பலம் காசி விஸ்வநாதர் திருக்கோயில் (2023)

2 ஆயிரமாவது குடமுழுக்கு மயிலாடுதுறை கீழப்பரசலூர் வீரட்டேஸ்வரர் திருக்கோயில் (2024)

3 ஆயிரமாவது குடமுழுக்கு நாகை திருப்புகலூர் அக்னீஸ்வரர் திருக்கோயில் (2025)

4 ஆயிரமாவது குடமுழுக்கு இன்று, பெரம்பூர் சேமாத்தம்மன் திருக்கோயிலில்...

இதுவரை இப்படி ஒரு சாதனை தமிழ்நாட்டின் வரலாற்றில் இல்லை! மதவாத அரசியல் செய்வோர்க்குத் தமிழ்நாட்டில் இடமில்லை!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

### பா.மு.முபாரக் - அரசு கொறடா கா.ராமச்சந்திரன் பங்கேற்பு!

# நீலகிரி மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

### மாவட்டப் பொறுப்பாளர் கே.ஆர்.ராஜு அறிக்கை!



நீலகிரி, ஜன.31-

நீலகிரி மாவட்டப் பொறுப்பாளர் கே.ஆர். ராஜு விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

நீலகிரி மாவட்ட திமுக செயற்குழு கூட்டம் இன்று (31.1.2026 - சனிக்கிழமை) காலை 11 மணி அளவில் மாவட்ட கழக அவை தலைவர் கே.போஜன் தலைமையில், கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் பா.மு.முபாரக், கழக தேர்தல் பணி செயலாளர், அரசு தலைமைக் கொறடா கா.ராமசந்திரன் மற்றும் சட்டமன்ற தொகுதி பார்வையாளர்கள் ஆர்.பி. பரமேஷ்குமார் (கூடலூர்), தென்றல் செல்வராஜ் (உதகை), கோவை திராவிடமணி (குன்னூர்) ஆகியோர் முன்னிலையில் மாவட்ட கழக அலுவலகமான உதகை கலைஞர் அறிவாலயத்தில் நடைபெறவுள்ளது.

இதில் மாவட்ட கழக நிர்வாகிகள், மாவட்டத்திலுள்ள தலைமை கழக நிர்வாகிகள், தலைமைக் கழக செயற்குழு-பொதுக்குழு உறுப்பினர்கள், நகர, ஒன்றிய,பேரூர் கழக செயலாளர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் தலைவர்கள் உள்ளிட்ட அனைவரும் தவறாது கலந்து சிறப்பிக்க கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்:

1. கழக ஆக்க பணிகள்.
2. 20.1.2026 சென்னையில் கழக தலைவர் முதல்வர் அவர்கள் தலைமையில் நடந்து முடிந்த மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்ட முடிவுகள் குறித்து.
3. 2026 சட்டமன்ற தேர்தல் பணிகள் குறித்து.

இவ்வாறு அவர தெரிவித்துள்ளார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க தாய்மொழியான தமிழைக் காத்திட தன்னுயிரை ஈந்த மொழிப்போர்த் தியாகிகளுக்கு வீரவணக்க நாள் ஈரோடு தெற்கு மாவட்ட கழக இளைஞர் அணி சார்பில் மாவட்டக் கழக அலுவலகத்தில் ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார் தலைமையில் மொழிப்போர்த் தியாகிகளுக்கு வீரவணக்கம் செலுத்தப்பட்டது. நிகழ்வில் மாநில இலக்கிய அணி துணை செயலாளர் ஈரோடு இறைவன், மாவட்ட கழக துணைச் செயலாளர் ஆ.செந்தில்குமார், மாவட்ட பொருளாளர் ப.க.பழனிச்சாமி, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஜெ.திருவாசகம், பகுதி கழகச் செயலாளர்கள் அக்னி சந்துரு, பொ.ராமச்சந்திரன், தண்டபாணி உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.